பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : வைகாசி 8 (21—5—68) செவ்வாய் ★ வெளியூர் : வைகாசி 9 (22—5—68) புதன் [இதழ் : 282

இலங்கை அகதிகள் தொழில் நடத்த உதவி

ரூ. 10 இலட்சம் மத்திய அரசு ஒதுக்குகிறது

புதுடில்லி, மே 20—

இலங்கை அகதிகளுக்குத் தொழில் நடத்தும்பொருட்டுக் கடன் வழங்குவதற்காகத் தமிழகஅரசுக்கு மத்திய அரசு ரூ. 10இலட்சம் கடன் அனுமதித்திருக்கிறது.

இந்தக் கடனுக்கு ஐந்தரை சதவிகிதத் தனி வட்டி செலுத்த வேண்டும். பத்தாண்டுக் காலத்தில் திருப்பித்தர வேண்டும்.

இந்திய—இலங்கை உடன்பாட்டின்படி கடந்த ஜனவரி வரை இலங்கையிலிருந்து 4751 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டு இங்கு வந்துள்ளனர்.

மக்களிடம் நாணயம் இழந்துவிட்ட அரசாங்க நாணயங்கள்!

இந்திச் சொல்லுடன் இந்தி இலக்கணத்தையும் புகுத்தும் அநீதி

இரா. செழியன் கண்டனம்

நாடாளுமன்ற மக்களவையில் கொண்டுவரப்பட்ட இந்திய நாணய முறைச் சட்டத்தைத் திருத்தும் மசோதாமீது கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் தந்த கருத்துரையாவது :—

காசும் பறக்கிறதே !

இப்பொழுதுள்ள சட்டப்படி, ஒரு ரூபாய் மதிப்புவரை அரசாங்கம் உலோக நாணயங்களை வெளியிடலாம். ஒரு ரூபாய்க்கும் மேற்பட்டு நூறு ரூபாய்வரை நாணயங்களை வெளியிட அதிகாரம் கோரி, அரசாங்கம் ஒரு மசோதாவைக் கொண்டுவந்துள்ளது.

உலக விவசாய அமைப்பின்கீழ், பத்து ரூபாய் மதிப்புக்கு நாணயங்களை வெளியிட அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது; எனவே இந்த மசோதா வருகிறது.

இப்பொழுதுள்ள சட்டப்படி, ரூபாய்—அரை ரூபாய்—கால் ரூபாய்—மற்றும் பல காசுகள் அடிக்கப்படுகின்றன. இது எந்த அளவு சரியாக நடைபெற்றிருக்கிறது என்று நாம் பார்க்க வேண்டும்.

ரூபாயின் மதிப்பு வேகமாக விழ்ந்துகொண்டிருப்பது நமக்குத் தெரியும். அதைவிட மோசமான முறையில், அடிக்கப்படும் காசுகளின் தரமும், கனமும் விழ்ந்துகொண்டிருக்கின்றன.

விலைவாசிகள்தாம் பறக்கின்றன என்றால், இந்த அரசாங்கத்தின் காசும் பறக்க ஆரம்பித்துவிடுகிறது !

இந்த 3-காசு, 2-காசுகளைப் பார்த்தால் தெரியும்—மேசையில் வைத்தால் போதும்—காற்றில் பறந்துவிடும் !

மதிப்பும் நம்பிக்கையும் குறைவானேன் ?

பணம், காசுகளைத் தமிழில், 'நாணயம்' என்று குறிப்பிடுகிறார்கள் !

'நாணயம்' என்பது, காசு, பணம் மட்டுமல்ல; 'மதிப்பு'—'நம்பிக்கை' என்றும் பொருள்படும்.

அரசாங்கத்தின் காசுக்கும், மக்களிடம் மதிப்பும் நம்பிக்கையும் உண்டாகவேண்டும்; ஆனால், இந்திய அரசாங்கம் வெளியிடும் நாணயத்தின்மீது மக்களுக்குள்ள மதிப்பும் நம்பிக்கையும் குறைந்துகொண்டே போகின்றன !

இந்திக்காரர்களுக்கு இல்லாதது ஏன் ?

முன்பு வந்த நாணயங்களில், ஒரு ரூபாய் — பெரிய அளவுள்ள அரையணா ஆகியவற்றில், தமிழ், தெலுங்கு போன்று மற்ற மொழிகளிலும் பெயர் எழுதப்பட்டிருந்தது.

இப்பொழுது எல்லா நாணயங்களிலும், 'இந்தியா' என்றுள்ள ஆங்கிலச் சொல்லைத் தவிர்த்து, மற்றெல்லாம் இந்தியிலேயே இருக்கின்றன.

இந்தியில் எழுதப்படுவதைப் போல், மற்ற மொழிகளிலும் ஏன் எழுதப்படவில்லை ? இந்திய நாணயங்களை இந்தி பேசுபவர்கள் மட்டும்தான் பயன்படுத்துகிறார்களா ?

வெள்ளைக்காரர்களுக்கு இருந்த தரமான மனப்பான்மைகூட, இந்திக்காரர்களுக்கு இல்லாதது ஏன் ?

பத்து ரூபாய் மதிப்பில் வெளியிடப்படும் நாணயத்திலாவது, தமிழ் முதலிய மற்ற மொழிகளுக்கும் இடம் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

1969-ல், காந்தியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருக்கிறது.

உலக விவசாய அமைப்புக்கு விழாக் கொண்டாடுவதையொட்டிப் பத்து ரூபாய் நாணயம் வெளியிட முன்வந்திருக்கும் அரசாங்கம், காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவிற்கும் அதே போல் பத்து ரூபாய் நாணயம் வெளியிட முன்வர வேண்டும்.

வேறு இலக்கண முறை வருவது நியாயமா ?

கடைசியாக ஒன்று; 'செக்'குகளிலும், மற்ற குறிப்புகளிலும் பைசாவின் பன்மையாக 'பைசே' என்று எழுதுமாறு வலியுறுத்தப்படுகிறது ஆங்கிலத்தில் எழுதும்பொழுதும் இந்த முறை வற்புறுத்தப்படுகிறது.

'பைசே' என்பது—இந்தியில்—'பைசா' என்பதன் பன்மை.

இந்தி இலக்கணப்படி இது சரி; ஆனால், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு அப்படியே எடுத்துக் கொள்ளப்பட்டாலும், இலக்கண முறையில் புதிய மொழியின் இலக்கணத்தை அது பின்பற்ற வேண்டுமே தவிர, வேறு இலக்கண முறை அங்கு வரக்கூடாது.

'கார்' என்ற ஆங்கிலச் சொல் இந்திய மொழிக்கு வந்தாலும், அந்த மொழிக்குரிய இலக்கணப்படி பன்மை அமைய வேண்டுமே தவிர, 'கார்ஸ்' என்ற ஆங்கிலப் பன்மை இங்கும் பயன்பட வேண்டும் என்று கூறுவது அறிவுடைமையாகாது.

அதேபோல், 'பைசா' என்பது 'பைசாக்கள்' என்று வேண்டுமானால் இருக்கலாமே தவிர, 'பைசே' என்று இந்தியல்லாத மற்ற மொழிகளிலும் கூறுவதற்கு பொருள் இல்லை.

இது, இந்திச் சொற்களை மட்டுமல்ல; இந்தி இலக்கணத்தையும் புகுத்தும் தீங்கான முயற்சியாகும். இது தடுக்கப்பட வேண்டும்.

தமிழில், 'காசு'—'காசுகள்' என்று பயன்படுத்துகிறோம்.

பிரான்சில் 60லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம்

டிகால் ஆட்சிக்குப் பெரும் நெருக்கடி

நாட்டின் வாழ்க்கை நிலை நின்றுவிட்டது

பாரிஸ், மே 20—

பிரான்சில் 50 இலட்சம் முதல் 60 இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

1936-க்குப் பிறகு இத்தகைய நெருக்கடி இதுவரை ஏற்பட்டதில்லை.

இது, டிகால் ஆட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

250 பெரிய ஆலைகளை வேலை நிறுத்தக்காரர்கள் வசப்படுத்திக் கொண்டுவிட்டனர். அத்தகைய ஆலைகளின் எண்ணிக்கை மணிக்கு மணி அதிகரித்து வருகிறது. நாட்டின் வாழ்க்கை நிலை நின்றுவிட்டது.

அதிபர் டிகால் எதுவும் கூறுமல் மௌனமாக இருக்கிறார்; 'குழப்பத்துக்குப் பணியமாட்டேன்' என்று அவர் கூறினார்.

இரயில்களும், சுரங்க இரயில்களும், பஸ்களும், விமானங்களும் நின்றன. தபால்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பாங்கிகளில் நீண்ட 'கியூ'க்கள் காணப்பட்டன. பீதியடைந்த மக்கள் பணம் வாங்கக் காத்திருந்தனர்.

பணம் தீர்ந்துவிட்டதால், சனடா பாங்கி மூடப்பட்டுவிட்டது.

கூடுதலாகப் பால் கிடைக்க ஏற்பாடு

சென்னை, மே 21—

சென்னையில் அரசுப் பால் பண்ணையின் 77 டிப்போக்களிலும் வழக்கமான விலைக்கு கார்டு இல்லாதவர்களுக்கும் எருமைப் பால் கிடைக்கும்.

பால் வரத்து அதிகரித்துள்ளதை முன்னிட்டு பல்வேறு டிப்போக்களுக்கும் கூடுதலாக 10,000 லிட்டர் பால் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நகரில் உள்ள 5 அலுவலகங்களில், நெய், வெண்ணெய் முதலியவையும் விற்கப்படும்.

தமிழகத்தில் இரு புதிய தொழிற்சாலை

சேலம் உருக்காலை நான்காம் திட்டத்தில் இடம்பெறும்

டெல்லியிலிருந்து திரும்பிய அண்ணா தெரிவிக்கும் நம்பிக்கை

சென்னை, மே 20—

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலை அமைக்கும் திட்டம் நிச்சயம் இடம்பெறும் என்று நம்புவதாக, முதலமைச்சர் அண்ணா அவர்கள், டெல்லியிலிருந்து திரும்பியதும் பேட்டி கண்ட செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"சேலம் உருக்காலைத் திட்டத்தைத் துவக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டாலே நான் மனநிறைவு கொண்டுவிடுவேன் ; திட்டம் துவங்கிவிட்டால் பிறகு அது வளர்வது உறுதி," என்றார் அண்ணா.

ஆஸ்பெட்டிலோ, விசாகப்பட்டினத்திலோ உருக்காலை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கைக்கு சேலம் உருக்காலைக் கோரிக்கை எதிரானதல்லவென்றும், உண்மையில் இந்த மூன்று திட்டங்களையும் அனுமதிக்கும் பொருட்டு பொகாரோ உருக்காலைத் திட்டத்தை நிறுத்தி வைக்கவேண்டும் என்று யோசனை கூறியதாகவும் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சேதுசமுத்திரத் திட்டம்

சேதுசமுத்திரத் திட்டம் பற்றிக் கேட்டதற்கு அண்ணா அவர்கள் பதிலளித்ததாவது :—

'சேதுசமுத்திரத் திட்டத்தை நான்காம் திட்டத்தில் சேர்க்கும்படி நான் கேட்கப்போவதில்லை. என் கவனமெல்லாம் இப்போது தூத்துக்குடித் திட்டத்தை நிறைவேற்றுவதிலேயே இருக்கிறது. கிட்டத்தட்ட கைவிடப்பட்டுவிட்ட நிலையில் இருந்த தூத்துக்குடித் திட்டத்துக்கு உயிர் கொடுத்து அதற்குரிய நிதியும் இவ்வாண்டுக்கு ஒதுக்கச் செய்திருக்கிறோம். அடுத்த ஆண்டு, இத்திட்டத்துக்கு ஒரு பெரிய அளவில் நிதி ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

இரு பெருந்தொழில்கள்

தொழில் வளர்ச்சித்துறையமைச்சர் திரு. பக்ருதீன் அகமத், தமிழகத்தில் இருபெரிய தொழில் திட்டங்களைத் தனியார் துறையில் தொடங்குவதற்கு அனுமதி வழங்குவதுபற்றி முடிவு செய்யவிருக்கிறார்; அந்த முடிவை ஒரு வாரத்துக்குள் தெரிவிப்பதாகவும் உறுதியளித்திருக்கிறார்.

அந்த இரு தொழில்களில் ஒன்று மண் வெட்டும் இயந்திரத் தொழிற்சாலையாகும். இது அமெரிக்காவிலுள்ள ஜெனரல் மோட்டார் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ரூ. 15-கோடி செலவில் அமைக்கப்படும்.

இன்னொன்று பாலிஸ்டர் பைபர் (செயற்கை நூல்) தொழிற்சாலையாகும். இதுவும் அமெரிக்கா, மற்றும் சில வெளிநாட்டு ஒத்துழைப்புடன் ரூ. 10 கோடி செலவில் நிறுவப்படும்.

இத்தொழிற்சாலைகளுக்கான லைசென்சுகள் யாருக்குக் கொடுக்கப்படுகின்றன என்பதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. எப்படியோ இந்தத் தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் அமைக்க அனுமதிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவல்.

மண் வெட்டும் இயந்திரத் தொழிற்சாலையைத் திருவள்ளூருக்கு அருகில் நிறுவ இடம் உரிமை செய்யப்பட்டுள்ளது.

செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிறுவ அக்கறை கொண்டுள்ள குழுவினர், இப்போது டில்லியில் உள்ளனர்.

நாடாளுமன்ற மேலவையில் தி. மு. க.

தனி இடம் ஒதுக்கப்படும்

புதுடில்லி, மே 21—

துணைக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களை, தில்லை வில்லாளன் எம்.பி. அவர்கள், மே 14-ம் நாளன்று சந்தித்தார்.

"நாடாளுமன்ற மேலவையில் தற்போது தி. மு. கழக உறுப்பினர் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்திருப்பதால், எதிர்க்கட்சி குழுவினரில் ஒரு குழுவாக தி.மு. கழகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் ; இக்குழுவினருக்குத் தனி இடமும், தலைவருக்கு முன் வரிடமும் அளிக்கப்பட வேண்டும்" என்று அவர் வேண்டிக் கொண்டார்.

நாடாளுமன்ற அவைத் தலைவராகவும் உள்ள திரு. வி. வி. கிரி அவர்கள் ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.

நம்நாடு

ஆசிரியர் : இரா.செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 8 (21—5—68) செவ்வாய்

தேசாயின் கொள்ளி!

அஞ்சல் துறையில் பெரும் இழப்பு ஏற்பட்டு வருகிறது எனக் காரணம் காட்டி, அஞ்சல் துறையின் அனைத்துக் கட்டணங்களையும் நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் உயர்த்திவி டிருக்கின்றார். 6 காசாக இருந்துவந்த அஞ்சல் அட்டைக் கட்டணத்தைப் பத்துக் காசாக உயர்த்திவிட்டிருக்கிறார். 10 காசாக இருந்துவந்த உள்நாட்டு அஞ்சல் உறை 15 காசாக உயர்த்தப்பட்டுவிட்டிருக்கிறது. இதுபோன்றே, ஒவ்வொரு இனத்திலும் கட்டணங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன.

இப்படி அஞ்சல்துறை கட்டணங்களை உயர்த்தியதை, நாடாளுமன்றத்தில், கட்சி வேற்றுமை பாராது பெரும்பாலான உறுப்பினர்கள் முழுமூச்சாகக் கண்டித்தனர். 'கட்டண உயர்வால் ஏழை மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்' என்று அவர்கள் வாதிட்டனர்.

ஆனால், நியாயமான அவ்வாதங்களை நிதி அமைச்சர் செவிமடுக்கவில்லை. உறுப்பினர்கள் வேண்டுகோள் அனைத்தையும் அவர் அலட்சியம் செய்துவிட்டு, 'அஞ்சல் கட்டணங்களை உயர்த்தியது உயர்த்தியதுதான்; அதை மறு ஆய்வு செய்யமுடியாது' என அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டார். புதிய கட்டண விகிதமும், இத்திங்கள் பதினைந்தாம் நாள்தொட்டு செயலுருவம் பெற்றுவிட்டது.

இப்புதிய கட்டண விகிதத்தால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவது ஒருபக்கம் இருக்க, பதிவு செய்யப்பட்ட செய்தித் தாள்கள், கிழமை இதழ்களுக்கு அனுமதிக்கப்பட்டுவந்த அஞ்சல் சலுகையையும் நிதி அமைச்சர் ஒழித்துவிட்டு அதை உயர்த்தியும் இருப்பதன் விளைவாக, சிறு மூலதனத்தில் நடத்தப்பட்டு வருகின்ற செய்தித் தாள்களும், கிழமை இதழ்களும் உடனடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 'இனி பத்திரிகைகளை நடத்த முடியாது' என்ற நிலைக்கு, சிறிய பத்திரிகைகள் தள்ளப்பட்டிருக்கின்றன.

கிராம மக்களின் கல்வி வளர்ச்சி, அறிவுப் பெருக்கம், மற்ற முன்னேற்றங்கள் குறித்து அதிக அக்கறை இருப்பதாக இந்திய அரசு அடிக்கடி கூறிவருகிறது. அதற்காகப் பெருந் தொகையை, 'சமுதாய வளர்ச்சித் திட்டம்' என்ற பெயரால் செலவும் செய்து வருகிறது. இந்தவகையில், கிராம மக்களின் பொது அறிவு வளருவதற்குப் பத்திரிகைள் பெரும் பணியாற்றிவருகின்றன. இனி அச்சிறந்த பணியைப் பத்திரிகைகளால் ஆற்றமுடியாத நிலையை, நிதியமைச்சரின் புத்தக அஞ்சல் கட்டண உயர்வு உருவாக்கியிருக்கிறது.

கிராமங்களுக்கு அனுப்பப்படுகின்ற பத்திரிகைகள் அனைத்தும் அஞ்சல்துறையின் வாயிலாகவே அனுப்பப்பட்டு வருகின்றன. நகரங்களில் ஏஜெண்டுகள் மூலம் நேரடியாகச் சந்தாதாரர்களுக்கு பத்திரிகைகளை விநியோகிப்பதுபோல் கிராமங்களில் செய்ய முடியாது; காரணம், அங்கு சிலர்தான் சந்தாவாக முன்பணம் செலுத்திப் பத்திரிகைகளை வாங்கக்கூடியவர்கள். எனவே, அவர்களுக்கு அஞ்சல்துறை வாயிலாகத்தான் பத்திரிகைகளை அனுப்பித் தீர வேண்டியது கட்டாயமாகிறது. இதுவரையில் அம்முறையைத்தான், பெரிய—சிறிய பத்திரிகைகள் கையாண்டு வருகின்றன.

இதுவரையில் இரண்டு காசு அஞ்சல் தலை ஒட்டிப் புத்தக அஞ்சலில் அனுப்பப்பட்டுவந்த அதே பத்திரிகைக்கு இனி ஐந்து காசு அஞ்சல் தலை ஒட்டி அனுப்பவேண்டும். அதாவது, மூன்று காசு அஞ்சல் தலை கூடுதலாக ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒட்டியாக வேண்டும். இது, நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள், பத்திரிகைகளுக்கு வைத்திருக்கின்ற கொள்ளியாகும்.

சிறிய பத்திரிகைகள் பெரிதும், ஓராண்டு அல்லது அரையாண்டு சந்தாவை முன்பணமாகப் பெறுவதையே நம்பி உயிர் வாழ்ந்து வருபவையாகும். இவ்வாறு பெறக்கூடிய சந்தாதாரர்களுக்கு, இதுவரையில் அஞ்சல் கட்டணம் குறைவாக இருந்த காரணத்தால், அஞ்சல் மூலமாக அனுப்பிவந்ததில் குறைந்த அளவாவது இலாபம் கிடைக்க இடமிருந்தது. கட்டணத்தை உயர்த்தியதன்மூலம் நிதியமைச்சர், இதற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

'இதுவரையில் பத்திரிகைகளுக்குக் காட்டிவந்த அஞ்சல் சலுகையை, இனியும் தொடர்ந்து காட்டிவர வேண்டும்' என, அனைத்திந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் அமைப்பு, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை கையாளப்பட்டு வந்துள்ள நடைமுறைக்கு முழுதும் முரணாகப் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டுவந்திருக்கின்ற அஞ்சல் சலுகை ஒழிக்கப்பட்டிருக்கிறது என்றும், பத்திரிகைகளுக்கு அஞ்சல் துறை சலுகை வழங்குவது என்பது உலகம் முழுவதிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற ஏற்பாடாகும் என்றும் அந்த அமைப்பின் தீர்மானம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

தீர்மானம் நிறைவேற்றிய அளவுடன் இருந்துவிடாமல், நிதி அமைச்சரையும் அக்குழு சந்தித்து, கோரிக்கையை வெளியிட்டிருக்கிறது. ஆனால், நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களா அசைந்து கொடுப்பார்? 'கட்டணத்தை உயர்த்தியது உயர்த்தியதுதான்' எனக் கூறிவிட்டார்!

'நிதி அமைச்சர் பதவியைத் துறப்பதாக இருந்தால்கூட, பத்திரிகாசிரியர்களின் அஞ்சல் கட்டணச் சலுகை கோரிக்கைக்கு இணங்கமாட்டேன்' என்றும், 'அஞ்சல் கட்டணச் சலுகை போன்ற உதவிகளை பத்திரிகைகளுக்கு அரசாங்கம் செய்வது பத்திரிகைகளின் உரிமைக்குக் கேடு சூழ்வதாகும்' என்றும் தேசாய் அவர்கள், தமது பிடிவாதத்திற்குக் குதர்க்கமான விளக்கத்தையும் தந்திருக்கின்றார்.

" எந்த நாடும், பத்திரிகைகளுக்கு அஞ்சல் கட்டணச் சலுகை வழங்கி இருக்கவில்லை " எனக் கூறி நிதி அமைச்சர், உண்மையை மறைக்கப் பார்த்திருக்கின்றார். தேசாயின் இக்கலப்பற்ற பொய்க்கு, அனைத்து இந்தியப் பத்திரிகாசிரியர்கள் அமைப்புத்தான் தக்க பதில் தரவேண்டும்.

'தங்கக் கட்டுப்பாட்டைக் கைவிட வேண்டும்' என்ற கோரிக்கை கிளம்பியபொழுதும்கூட, தமது நிதி அமைச்சர் பதவியைத்தான் தேசாய் விலை கூறினார். இப்பொழுதும், அதே பதவியை விலையாகக் கொடுக்க முன்வருகின்றார்!

இதுவுமன்றி, மற்றொரு விசித்திரமான கருத்தையும் தேசாய் குறிப்பிட்டுள்ளார்; அதாவது, 'கிளப்பப்படுகின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் நிதி அமைச்சராக இருப்பவர் இணங்கவேண்டும் என்றால், தேசத்துக்கு நிதி அமைச்சர் என ஒருவர் இருக்கவே தேவை இல்லை' என்ற நகைப்புக்குரிய கருத்தையும் வெளியிட்டிருக்கின்றார். அவருடைய கருத்தும் போக்கும் எப்படி இருந்திட்டாலும், சிறிய பத்திரிகைகளின் உயிரைப் போக்கடிக்கக்கூடியதுதான் தேசாய் அவர்களின் கட்டண உயர்வு என்பதை மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

—கா. க.

வகுப்பு வெறியர்கள் மீது நடவடிக்கை

வெறுப்புணர்ச்சியை தூண்டும் பத்திரிகைகளுக்குத் தடை

முதலமைச்சர்கள் மாநாட்டில் முதலமைச்சர்கள் வெளியிட்ட பல்வேறு கருத்துக்கள்

புதுடில்லி, மே 21—

முதலமைச்சர்கள் மாநாட்டில் நாட்டின் சட்டம்—ஒழுங்கு பற்றி விவாதிக்கப்பட்டது; வகுப்புவாத அமைப்புகளைத் தடைசெய்வதா இல்லையா என்பது பற்றி எந்தவித முடிவுக்கும் வரவில்லை.

உள்துறை அமைச்சரின் தனி ஏற்பாடாகக் கூட்டப்பட்டிருந்த இந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், நாட்டில் அண்மையில் நிகழ்ந்த வகுப்புவெறி நடவடிக்கைகள் குறித்தும், அவற்றைத் தடுத்து நிறுத்தும் வழிமுறைகள் பற்றியும் 4 மணி நேரம் விவாதிக்கப்பட்டது.

வகுப்புவாத இயக்கங்களுக்கு புத்திமதி கூறலாம் என்றும், அவற்றைத் தடை செய்யலாம் என்றும் பல்வேறு கருத்துக்களை முதலமைச்சர்கள் தெரிவித்தனர்.

தடைசெய்வதில் சில சங்கடங்கள் இருப்பதாகச் சில முதலமைச்சர்கள் கூறினர்; 'எந்தக் கட்சி வகுப்புவாதக் கட்சி என்பதை வரையறுத்துத் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை; ஒரு மாநிலத்தில் வகுப்புவாதமாகக் கருதப்படுவது மற்றொரு மாநிலத்தில் அப்படிக் கருதப்படமாட்டாது; இடத்துக்குஇடம் நிலைமை வெவ்வேறாக உள்ளது' என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசியல் சட்டத்தில், சங்கம் 'அமைத்துச் செயல்பட உரிமை வழங்கப்பட்டுள்ளது; எனவே, எந்த ஒரு கட்சியாவது தடை செய்யப்பட்டால், அரசியல் சட்டப்படி அது ஒரு குற்றமாகும். ஆகையால், 'அரசியல் சட்டத்தைத் தக்கவாறு திருத்த அரசு முன்வந்தாலன்றி, எந்தக் கட்சியையும் தடை செய்வது என்பது இயலாது' எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

"வகுப்புவாத வெறியாட்டங்களை ஒடுக்க நிர்வாக நடவடிக்கைகளோ, சட்ட நடவடிக்கைகளோ போதுமானவையல்ல; அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும்" என்றும் ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், பல்வேறு மாநிலங்களிலும் 'சேனைகள்' என்றபெயரால் தோன்றியுள்ள அமைப்புகள், ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு எதிராக வெறுப்புணர்ச்சியைத் தூண்டிவருவது பற்றி எடுத்துக்காட்டி கடும் கண்டனம் தெரிவித்தார்; 'இந்தச் சேனைகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்தினர்.

"அடுத்துக் கூடவிருக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திலும் இதுபற்றி மேலும் விரிவாக ஆராயவேண்டும்" என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

வகுப்பு வெறியையும், மற்ற சமூகங்களின்மீது பொறாமையுணர்ச்சியையும் தூண்டும் வகையில் சில பத்திரிகைகள் எழுதிவருவது குறித்தும் பேசப்பட்டது; 'இத்தகைய பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பதை எல்லா முதலமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

ஒரு பத்திரிகை வெறுப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் எழுதினால், அந்தப் பத்திரிகையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இயங்காமல் நிறுத்திவைக்க அரசுக்கு அதிகாரம் வழங்கும் சட்டம் பஞ்சாபில் இருந்துவருவது அனைவரது கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது; 'அதே போன்ற சட்டத்தை மற்ற மாநிலங்களிலும் இயற்ற வகை செய்ய வேண்டும்' என்று முதலமைச்சர் விரும்பினர்.

"வகுப்புவாதக் கலவரங்களை ஒடுக்குவதில் அதிகாரிகள் உறுதியாக நடந்துகொள்ள வேண்டும்" என்று முக்கியமாகக் கூறப்பட்டது; 'வகுப்புவாதக் கலவரங்களில் பொதுவாக அதிகாரிகள் எடுத்துக்கொள்ளும் முயற்சி போதாது' என்று உணரப்பட்டது.

"அரசாங்க நிர்வாகம் தங்களுக்குப் பக்கத்துணையாக இருக்கும் என்பதை உணர்ந்து அதிகாரிகள் துணிந்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தப்பட்டது.

இந்து மதத்தைச் சார்ந்த வகுப்புக் கட்சிகள், 'சிறுபான்மையினர் நாட்டுக்கு விசுவாசமாக இல்லை எனப் பிரசாரம் செய்துவருகின்றன; அதே நேரத்தில், சிறுபான்மையினரில் உள்ள தீவிரவாதிகள், தங்கள் சமூகத்தினருக்கு இந்த நாட்டில் தகுந்த பாதுகாப்பு இல்லை எனச் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்' என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

"இந்த இரு வேறு கருத்துக்களுமே பெரிய வகுப்புக் கலவரகளைத் தூண்டுகின்றன; எனவே, தாங்களும் இந்த நாட்டு மக்களின் ஒரு பகுதியினரே என்ற எண்ணம் சிறுபான்மையினரிடையே ஏற்பட முயற்சி செய்ய வேண்டும்" என்று வற்புறுத்தப்பட்டது.

"ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையினருக்கு எந்த அளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது என்பதை அறிய ஒரு மதிப்பீட்டுக் குழு அமைக்க வேண்டும்" என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் போதுமான அளவில் இல்லை என்றால், 'போதிய அளவு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறப்பட்டது.

"வகுப்புக் கலவரங்களை ஒடுக்குவதில் உள்ள முக்கிய சங்கடம் என்னவென்றால், பொதுவாக அத்தகைய கலவரங்கள் மிகச் சிறிய காரணத்தின் அடிப்படையிலேயே உருவெடுக்கின்றன. முன்கூட்டிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலையில் கலவரங்கள் மூளுகின்றன. எனவே, முன்கூட்டியே இக்கலவரங்களை எதிர்பார்த்து, தக்க நடவடிக்கை எடுப்பது என்பது மாநில அரசுகளுக்கு இயலாததாகிறது" என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

பல்வேறு முதலமைச்சர்களும் இந்தச் சிக்கல் குறித்து எடுத்துச் சொன்னபோதிலும், 'அதனைத் தடுக்க என்ன செய்யலாம்' என்பதை எடுத்துச் சொல்ல இயலாத நிலையிலேயே காணப்பட்டனர். எனினும், குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்; சட்டம் தனது வேலையைச் செய்ய அனுமதிக்க வேண்டும்; நிலைமை சீரடைந்ததும், வழக்குகளைத் திரும்பப்பெறுவது கூடாது' என்றெல்லாம் கருத்தறிவிக்கப்பட்டது.

'இந்தப் பிரச்சினையில் மாவட்ட மாஜிஸ்திரேட்டுகள், மாநில அரசின் உத்தரவுக்காகக் காத்திராமல் உடனடியாக தாங்களே நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் அவர்கட்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்; குறிப்பாக, வகுப்பு வெறியைத் தூண்டும் பத்திரிகைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு அதிகாரம் தேவை" என்றும் யோசனை கூறப்பட்டது.

காலங் கடந்த ஞானோதயம்

"நகர்ப்புறங்கள் நல்ல வசதிகள் பெற வேண்டுமானால், நீண்ட காலத் திட்டங்கள் போடப்பட வேண்டும். ஓராண்டு—ஈராண்டுத் திட்டங்களால் பயனில்லை. 20 ஆண்டு—50 ஆண்டுத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அதுதான் பூரணமான திட்டம்."

— சி. சுப்பிரமணியம்
(இராமநாதபுரம் நகர மன்ற வரவேற்பில்)

பாவம் சுப்பிரமணியம்! அவர் நிலைக்கு இது காலங் கடந்த ஞானோதயம்! டில்லிக்கு இதை அவர் அறிவுறுத்தினால் பலன் உண்டு.

எதிர்பார்க்கலாமா ?

இரயில்வே நிலையச் சொத்துக்கள் பறிமுதல்

வரிகளைச் செலுத்தாதலால் மாநகராட்சி நடவடிக்கை

பாட்னா, மே 20—

வரிகளையும், மற்றும் மாநகராட்சித் தீர்வைகளையும் செலுத்தாதலால், பாட்னா இரயில்வேயின் சொத்துக்களைப் பாட்னா மாநகராட்சி அதிகாரிகள், 'பறிமுதல்' செய்யத் துவங்கினர்.

வரி பாக்கியாக ரூ. 40,000 செலுத்த வேண்டியிருப்பதால், இரயில்வே அதிகாரிகள்மீது 'பறிமுதல் வாரண்டு' பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

துயர் துடைப்புச் சீரமைப்பு நிதி

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு மே 14-ம் நாளுடன் மொத்தம் ரூ. 37,88,153.35 சேர்ந்துள்ளது.

இரயில்வேயில் மலிந்துள்ள குற்றங்கள்

சட்டம்--ஒழுங்கை நிலைநாட்ட மாநில அரசுகள் அதிக நிதி ஒதுக்கவேண்டுமாம்

முதலமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் பூனுச்சா கோரிக்கை

"இரயில்வேத் துறையில் குற்றங்கள் மலிந்தும், சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்தும் காணப்படுகின்றன"

என்று முதலமைச்சர்கள் மாநாட்டில், இரயில்வேத் துறை அமைச்சர் பூனுச்சா தெரிவித்தார்.

மேலும் அவர், 'இரயில்களிலும், இரயில்வேக் கட்டிடங்களிலும் குற்றங்களைத் தடுப்பதற்கு அதிக நிதி வசதிகளை முதலமைச்சர்கள் ஒதுக்கவேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார்; 'இதற்காக மேற்கொண்டு நிதி வசதிகள் ஒதுக்க இயலாது' என்று முதலமைச்சர்கள் பலர் தெரிவித்தனர்; இதற்காக நிதி ஒதுக்குமாறு மத்திய அரசை அவர்கள் வற்புறுத்தினர்.

இரயில்வேத் துறை அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இரயில்வேயைச் சுரண்டும் தீய சக்திகளை ஒழிக்க மத்திய அரசு இன்னும் அதிகமாக ஒத்துழைப்புத் தரவேண்டும்.

"ஒவ்வொரு மாநிலமும், தத்தம் பகுதிகளில் ஓடும் இரயில்களைப் பொறுத்தவரையிலாவது சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்கவேண்டும்."

318-ல் 206!

சண்டிகார், மே 20—

அரியானாவில் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்ட 318 வேட்பாளர்களில் 206 பேர் பொறுப்புத்தொகை இழந்தனர்!

சுயேச்சையாகப் போட்டியிட்ட 180 பேர்களில் 145 பேர் பொறுப்புத் தொகை இழந்தனர்!

அனைத்து நாட்டுக் கட்டுரைப் போட்டி

தென்னகப் பெண்மணிக்கு பரிசு

இலண்டனில் நடைபெற்ற அனைத்து நாட்டுக் கட்டுரைப் போட்டி ஒன்றில் தென்னகத்தைச் சேர்ந்த திருமதி பத்மா சீனிவாசன் என்பவருக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. இவர் தென்னிந்திய மாதர் சங்கச் செயலாளர்.

இலண்டனில் உள்ள மாதர் சங்கம் ஒன்று, மூன்றுண்டுகளுக்கு ஒருமுறை இதுபோல் கட்டுரைப் போட்டி நடத்திவருகிறது. இந்த ஆண்டு நடந்த போட்டிக்கு 40 நாடுகளிலிருந்து 130 கட்டுரைகள் வந்திருந்தன.

கட்டுரைக்கான தலைப்பு:—'எதிர்காலம் பற்றி எனது நம்பிக்கை' என்பதாகும்.

கட்டுரை, கடித வடிவில்—ஒரு தாய் தன் பெண்ணுக்கு எழுதுவது போல்—இருக்க வேண்டும் என்றும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது.

"அத்தனைக் கட்டுரைகளிலும் உலக அமைதி வலியுறுத்தப்பட்டிருந்தது" என்று நீதிபதிகளில் ஒருவரான நியூசிலாந்து பெண்மணி கூறினர்.

திருமதி சீனிவாசனுக்கு மூன்றுவது பரிசுதான் கிடைத்தது. முதல் பரிசு பாகிஸ்தானைச் சேர்ந்த திருமதி படேல் என்பவருக்குக் கிடைத்தது.

சிறந்த கட்டுரை என்பதற்கான 'ஆறுதல் பரிசு', மற்றொரு தென்னிந்தியப் பெண்மணியான திருமதி மீனாட்சிக்குக் கிடைத்தது. இவரும் தென்னிந்திய மாதர் சங்கத்தில் தொடர்பு உள்ளவர்.

சுற்றி வளைக்கிறார் சுப்பிரமணியம்!

"நாட்டில் வேலைவாய்ப்பு கிடைக்கத் தொழிற்சாலைகளில் வேகமாக உற்பத்தி அதிகரிக்க வேண்டும். உற்பத்தியான பொருள்களைத் தீவிரமாக விற்பனை செய்ய வேண்டும். வாங்கும் சக்தி வளரத் தொழிலாளர்களின் கூலி உயர்வு அதிகரிக்க வேண்டும். இப்படித் திட்டமிடாமல் விலையைக் குறைத்து விடுவோம் என்றால் அது நடக்கக்கூடிய காரியமல்ல."

—ஆறுமுகநேரியில்

பாவம்! மத்திய அரசை நேரடியாகத் தாக்கமுடியாமல் சுற்றி வளைக்கிறார் சுப்பிரமணியம்!

மத்திய அரசு இந்த வகைகளில் ஒத்துழைக்க தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் ஏற்பாடு செய்தால், தமிழக அரசின் விலை குறைப்பு நடவடிக்கைக்குப் பேருதவி செய்தவர் ஆவார்.

செய்வாரா? கழக அரசு அல்லவா பெருமைக்குரியதாகி விடும்! அதற்கு மனம் வருமா?

தமிழக அரசில்

இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

சென்னை, மே 20—

31—12—67 உடன் முடிந்த காலாண்டில் இலஞ்சக் குற்றச்சாட்டுகளின்மீது தண்டிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:—

இரண்டு போலீசு இன்ஸ்பெக்டர்கள், 3 போலீசு சப்-இன்ஸ்பெக்டர்கள், 2 தலைமைப் போலீசுக்காரர்கள், 3 போலீசுக்காரர்கள், ஒரு நகராட்சி ஆணையர், ஒரு விவசாய வருமான வரி அதிகாரி ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர், ஒரு வனத்துறையாளர், ஒரு வனத்துறை காப்பாளர், கைத்தொழில் வர்த்தகத் துறையைச் சேர்ந்த 2 உதவியாளர்கள் ஆகியோர் அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டனர்.

ஒரு பியூன், ஒரு போலீசு சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் கட்டாயமாக ஓய்வு பெறுமாறு செய்யப்பட்டனர்.

ஒரு தனி ரெவினியூ இன்ஸ்பெக்டர், தற்காலிகமாக வேலைநிறுத்தம் செய்யப்பட்டார்.

ஒரு வனத்துறைக் காப்பாளர் வேலை வாய்ப்புப் பயிற்சி நெறியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த ஒரு டைப்பிஸ்டு ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஒரு நாயக்கின் பதவி நிலை இறக்கப்பட்டது.

தொழில்கள் பெருகினால்தான் இங்கு இயலும்!

"ஒருவர் சம்பாதித்து, ஒரு குடும்பத்திலுள்ள மற்ற அனைவரையும் காப்பாற்றும் நிலை இன்று நாட்டில் நிலவுகிறது; சமூகத்தின் இந்த அமைப்பு முறை மாறவேண்டும், குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் சம்பாதித்து, குடும்ப வருமானத்தைப் பெருக்கவேண்டும்.

"ஜப்பானைப்போல் தொழில்கள் பெருகினால்தான் இது இயலக்கூடும். ஜப்பானில் ஒவ்வோர் இல்லமும் தொழிற்கூடமாக இருக்கிறது; அந்த அளவில் தொழில்களை விரிவான முறையில் பரப்புவதற்கு இங்கு நாம் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்."

---வி. வி. கிரி

(துணைக் குடியரசுத் தலைவர்)

கழகத் தோழர்கள்மீது அவதூறுக் காங்கிரசு ஏட்டின் சரடு!

புதவண்ணைப் பகுதியில் கடை வைத்திருக்கும் தி. மு. க. பிரமுகர் வீட்டில் இரவோடு இரவாக 15 மூட்டை அரிசி வந்திறங்கியதாகவும், அந்தப் பிரமுகர் வட்டச் செயலாளர் என்றும், வலதுசாரிக் கம்யூனிஸ்டுத் தோழர்களும், தேசியத் தோழர்களும் இதுபற்றிப் போலீசுக்குத் தகவல் கொடுத்ததாகவும், பொதுமக்களே வீட்டிற்குள் புகுந்து 5 மூட்டை அரிசியை வெளியே கொண்டுவந்ததாகவும், வடசென்னையில் புதிதாக முளைத்திருக்கிற காங்கிரசு நாளிதழ் ஒன்றில் நகைப்புக்குரிய செய்தியொன்று வெளிவந்துள்ளது.

உண்மையில் நடந்த நிகழ்ச்சி என்னவென்றால், அரிசி கைப்பற்றப்பட்டது கழகத் தோழர் வீட்டிலிருந்து அல்ல; கழகச் சார்பு மன்றமான வள்ளுவர் மன்றத்தைச் சேர்ந்த தோழர்கள்தான் போலீசுக்குத் தகவல் கொடுத்தார்கள். அதே மன்றத்தைச் சேர்ந்த இரத்தினம் என்பவர் கடை வைத்திருக்கும் வீட்டிலிருந்துதான் அரிசி 5 மூட்டை கைப்பற்றப்பட்டது. அவர் வைத்திருக்கும் கடைக்கும் அரிசி கைப்பற்றப்பட்ட வீட்டில் குடியிருப்பவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அந்த வீட்டுக்காரர் (கணேசன் என்பவர்) வேறு ஓரிடத்தில் கடை வைத்திருப்பவராம் அவருக்கும் கழகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

அந்த ஏடு வழக்கம்போல் கற்பனைச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அந்த ஏடு குறிப்பிட்டிருப்பது போல் வட்டச் செயலாளர் வீட்டிலிருந்து அரிசி மூட்டை எதுவும் கைப்பற்றப்படவுமில்லை.

அரிசியைக் கைப்பற்ற அதிகாரிகளுக்கு உதவியாயிருந்தவர்களே கழக மன்றத்தைச் சேர்ந்த தோழர்கள் சந்திரன், பாலகிருஷ்ணன், முனுசாமி, கணேசன் என்பவர்கள்தான் என்பதை, சென்னை முதல் வட்ட வள்ளுவர் மன்றச் சார்பில் அறிவிக்கின்றனர்.

புற்று நோயைக் கண்டுபிடிக்கப் புதிய கருவி!

பெண்களுச்குக் கருப் பையின் மேல் பாகத்தில் ஒருவகை புற்று நோய் வருவதுண்டு. தொடக்கக் காலங்களில் இந்த நோய்க்கான அறிகுறி எதுவும் எளிதில் தெரியாது. பிறகு திடீரென இதன் கொடுமை ஆரம்பமாகும் வளர்ந்துவிட்ட நிலையில் குணப்படுத்தவும் இயலாது--மிகவும் கடினம்.

தொடக்கக் காலத்திலேயே இதனை அறிந்து கொள்ளக்கூடிய கருவி ஒன்றையும், அந்தத் தொடக்க நிலையிலேயே நோயைக் குணமாகக்கூடிய மருத்துவ முறையையும் ஒரு பிரிட்டிஷ் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது!

அண்மையில் புற்று நோய்க்கான அறிகுறிகளைக் கண்டுபிடிக்கும் இந்த இயந்திரம், இலண்டன் மருத்துவமனை ஒன்றில் இயக்கிக் காட்டப்பட்டது. கருப் பையின் தோற்றத்தையும், அதைச் சுற்றியுள்ள 'செல்'களின் அமைப்புகளையும் இந்தக் கருவி தெளிவாகப் படம் பிடித்து ஒரு திரையில் விழச் செய்கிறது. தெளிவாகவும், பெரிய அளவிலும் திரையில் விழும் படத்திலிருந்து, புற்றுநோய்க்கான முன் அறிகுறிகள் இருப்பின் தெரிந்துகொண்டு, தாமதிக்காமல் அதற்கான சிகிச்சை செய்துகொண்டால் இக்கொடும் நோயிலிருந்து தப்பிக்கலாம்.

6,000 பவுன் விலையுள்ள இந்தப் பயனுள்ள நவீன கருவி, உலகிலேயே முதன்முதலாகப் பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைச் சோதித்து, இதன் பயனை உணர்ந்த ஒரு மருத்துவ நிபுணர், 'எப்படி அம்மைத் தடுப்பு முறை வழக்கத்திற்கு வந்துள்ளதோ' அதேபோல், இந்தக் கருவியின் உதவியுடன் புற்றுநோய்த் தடுப்பு முறையும் பரவலாகிவிடும்' என்றார்.

பாகுபாடு எங்கே?

"தமிழகத்தில் தி. மு. க. அரசு பதவி ஏற்றபிறகு நகரசபைகளுக்கும், யூனியன்களுக்கும் சரியாக நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த நிலை நீடித்தால் முன்னேற்றம் மிகவும் தடைபட்டுப் போகும். எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் உள்ள நிதியைப் பகிர்ந்தளிக்கவேண்டியது முறையாகும்."

- சி. சுப்பிரமணியம்

(இராமநாதபுரம் நகரமன்ற வரவேற்பில்)

பொறுப்பான பதவிகளில் இருந்த ஒருவர்—தமிழகத்தின் எதிர்க் கட்சித் தலைவர்—இப்படிப் பொதுவாகப் பேசுவது அறிவுடைமை ஆகுமோ?

தமிழகம் முழுமையிலும் பேரூராட்சிகள் உட்பட 12,864 ஊராட்சிகள் உள்ளன. 374 ஊராட்சி ஒன்றியங்களும், 457 பேரூராட்சி மன்றங்களும், 14 நகரியங்களும் உள்ளன.

இவற்றில் எங்கே -- எதற்கு நிதி ஒதுக்குவதில் பாகுபாடு என்று சுட்டிக்காட்டுவதுதான் யோக்கியமானது!

கட்டிடக் கலையில் புரட்சி

கலவைஇல்லாமலே ஒட்டிக்கொள்ளும் பிளாஸ்டிக் செங்கல்

கொத்தனர் உதவியின்றியே வீடு கட்டிக்கொள்ள வசதி

பல நூற்றுண்டுகளாகக் கட்டிடம் கட்ட செங்கலையும் சிமெண்டு அல்லது சுண்ணும்புக் கலவையையும்தான் உலகெங்கும் மக்கள் கையாண்டு வந்துள்ளனர். நாளடைவில் நாகரிகத்தைக் காட்டும் வகையில் வெளிப் பூச்சுக்களை விதவிதமாக அமைத்து வந்தார்களே தவிர, சுவர்கள் மட்டும் செங்கல் சுவர்களாகவே இருந்து வருகின்றன; மேல் பூச்சும் சிமெண்டுப் பூச்சுதான்.

"செங்கலையும், அதற்குத் தேவையான கலவையையும் நம்பி வந்த உலகம், இனி இந்தத் துறையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை மேற்கொள்ளலாம். கட்டிடம் கட்டத் தேவைப்படும் கற்களை பிளாஸ்டிக்கில் தயாரிக்கலாம்"

என்று கூறி, செய்து காட்டியும் விட்டார் ஒரு பிரிட்டிஷ் கட்டிடக் கலை நிபுணர்.

கையாளுவதற்கு எளிதாகவும், காண்பதற்குக் கவர்ச்சியாகவும் உள்ள இந்த பிளாஸ்டிக் கற்கள், உறுதியுள்ளவையாகவும் உள்ளன; சாதாரண செங்கல் அளவுதான் இவையும் உள்ளன.

இவற்றை எடுத்து அப்படி அப்படியே அடுக்கிவிட வேண்டியதுதான்; கலவை எதுவும் தேவையில்லை.

நான்கு ஓரங்களும் ஒன்றோடொன்று பொருந்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதால், நாமாகச் சிரமப்பட்டு எடுத்தாலன்றி, தாமாக விலகிக்கொள்ளாத அளவுக்கு இவை இணைந்து உறுதியுடன் பிடித்துக்கொள்கின்றன.

இந்தப் பிளாஸ்டிக் செங்கற்கள் கனமில்லாதவையாக இருப்பதால், கட்டிடத்திற்குக் 'கடைக்கால்' தேவையில்லை; தரையைத் தோண்ட வேண்டிய அவசியம் இல்லை.

அப்படியே தரைமட்டத்திற்கு மேலே இந்தக் கற்களை அடுக்கி சுவர்கள்—குறுக்குச் சுவர்கள் எழுப்பி, நம் விருப்பத்திற்கேற்றவாறு பல அறைகள் கொண்ட வீடுகளை நாமே—கொத்தனர் உதவியே இல்லாமல்—கட்டிக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட அளவுள்ள ஆயிரம் கற்கள் வாங்கினேமென்றால், அத்தனையும் ஒரே அளவிற்கு—நீள, அகலத்தில் ஒன்றுக்கொன்று ஒரு நூலிழை வித்தியாசம்கூட இராமல்—கிடைக்கும். சதுர, செவ்வக வடிவில் இவற்றைத் தயாரிக்க முடியும்.

பல வண்ணங்களில் பிளாஸ்டிக் கிடைக்கின்றதாகையால், இந்த வீடுகளுக்கு வெள்ளையடிக்கவோ, வேறு வண்ணப் பெயின்டுகள் அடிக்கவோ தேவையில்லை.

ஓர் ஊரைவிட்டு வேறு ஊர் செல்ல வேண்டுமென்றால்கூட வீட்டையே பிரித்துத் தனித் தனிச் செங்கற்களாகத் எடுத்துக்கொண்டு போகலாம்; புதிய இடத்தில் நாமே இந்தக் கற்களை அடுக்கி ஒரே நாளில் மீண்டும் கட்டிக்கொண்டுவிடலாம்—குறைந்தபட்சம் அவசரமாக ஓர் அறையையாவது கட்டிக்கொள்ள முடியும்.

வெப்பத்தைத் தாங்கிக்கொள்ளும் இந்தப் பிளாஸ்டிக் கற்கள் குளிரையும் தடுத்து நிறுத்தும் தன்மையுடையவை. சுத்தப்படுத்துவது மிக எளிது—ஈரத் துணியால் துடைப்பது தவிர வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை. அழகுக்கு அழகு—கவர்ச்சிக்குக் கவர்ச்சி—எளிமைக்கு எளிமை—கட்டுவதும், கட்டியதைக் கலைப்பதும் எளிது! கலவை தேவையில்லை—கொத்தனர் உதவியும் தேவையில்லை!

இப்போதுள்ள வீடுகளை ஒரு ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நிச்சயம் அப்போதைய மக்கள் விரும்பமாட்டார்கள்; ஒரு மாறுதலைத்தான் விரும்புவார்கள்; இது இயற்கை. ஏன்—நம்மையே எடுத்துக்கொள்வோம்; ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளை—அவை அப்போது எவ்வளவுதான் சிறப்புடையவையாகக் கருதப்பட்ட போதிலும்—இன்றுள்ள நிலையில் நாம் விரும்புவதில்லை. வருகிற ஆண்டுகள் இதைவிட வேகமான வளர்ச்சி காணும். மக்களும் பெரும் அளவில் மாறுதல்களை விரும்புவர். விரைவிலேயே இந்த பிளாஸ்டிக் செங்கற்கள் உலகெங்கும் உபயோகத்திற்கு வரக்கூடும். அதன் மூலம் கட்டிடத் தொழிலில் ஒரு புரட்சிகரமான மாறுதல் தோன்றவும் வாய்ப்பு உண்டு!

விலை கொடுத்துப் பெற்ற வெற்றி!

அரியானா இடைத் தேர்தலில் காங்கிரசு கையாண்ட முறை!

ஐதராபாத், மே 20—

'அரியானாவில் இப்பொழுது அமையக்கூடிய காங்கிரசு ஆட்சி இன்னும் எத்தனை நாளைக்கு?' என்ற கேள்வி (அங்கு பதவி ஆசையின் காரணமாக ஏற்பட்ட 'திருவிளையாடல்' களையொட்டி) நாட்டில் எதிரொலித்துக் கொண்டிருக்கையில், ஜனசங்கக் கட்சியின் செயலாளர் மனாஜி தேஷ்முக் என்பவர், இடைத் தேர்தலில், காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த வெற்றிக்குப் பின்னுலுள்ள 'மர்ம'ங்களையும், தேர்தல் 'தில்லுமுல்லு'களையும் பற்றித் தெரிவித்திருப்பது, திடுக்கிடக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

அதுபற்றி அவர் கூறியிருப்பதாவது:—

"அரியானா இடைத் தேர்தலில் காங்கிரசுக்குக் கிடைத்த வெற்றி, 'விலை' கொடுத்து வாங்கப்பட்ட வெற்றியேயாகும்; தானாகக் கிடைத்த வெற்றி அல்ல!

"இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி, ரூ 1-கோடி வரையில் செலவிட்டிருக்கிறது!

"வாக்குச் சாவடிகளுக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல 3,000-க்கும் அதிகமான லாரிகளும், டிரக்குகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன!

"வாக்காளர்களுக்குப் பெரும் அளவில் பணம் தரப்பட்டிருக்கிறது!"

தமிழகப் பஞ்சாலை நெருக்கடிக்குப் பரிகாரம்

ஆலை உரிமையாளர்கள்— தொழிலாளர் பிரதிநிதிகளுடன் அண்ணா பேச்சு

மே 23-ல் திருச்சியில் சந்திக்க ஏற்பாடு

சென்னை, மே 21—

தமிழகத்தில் பஞ்சாலைத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தக்க பரிகாரம் காணும்பொருட்டு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மே 23-ஆம் நாள் திருச்சியில் ஆலை உரிமையாளர்களையும், தொழிலாளர் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசவிருக்கிறார்.

புதுடில்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு சென்னை திரும்பிய அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

டில்லியில் மத்திய அமைச்சர்களுடன் அண்ணா அவர்கள், பஞ்சாலை நெருக்கடி குறித்துப் பேச்சு நடத்தினர்.

இந்த நெருக்கடிக்கு உடனடியாகப் பரிகாரம் காணப்பட வேண்டும் என்பதும், நெருக்கடி நிலையைக் குறைக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாக அண்ணா கூறினர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"தமிழ்நாடு 'அபெக்ஸ்' நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பிரைமரி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிடமிருந்து கைத்தறித் துணி இருப்புகளை வாங்குவதற்கு உதவுவதற்காக மாநிலத்திற்கு ரூ. 50 இலட்சம் கடன் தரப்படுகிறது. இந்தச் சங்கங்களிடம் ரூ. 2 கோடி பெறுமான சரக்கு தேக்கமுற்றிருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இந்தக் கடன் உதவி நிலைமையைச் சமாளிக்க பெரிதும் உதவும்

"நெருக்கடி நிலையில் உள்ள ஆலைகளுக்கு உதவுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் பரிசீலிக்கப்படுகின்றன. இப்போது 5 ஆலைகளை அரசு ஏற்று நடத்தும் வாய்ப்பு—வசதி பற்றி சீனிவாசன் குழு பரிசீலிக்கும். 'நெருக்கடி நிலையில் உள்ளது' என்று இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசால் மதிப்பிடப்படும் மற்றும் 16 ஆலைகளின் நிலைமையை இந்தக் குழு பரிசீலிக்காது.

இந்த 16 ஆலைகளின் விவகாரம் பற்றி டாக்டர் பி. எஸ். லோகநாதன் தலைமையில உள்ள குழு பரிசீலித்து, 'இவற்றிற்கு வர்த்தகப் பாங்கிகள் கடன் அளிக்க அரசு உத்தரவாதம் தருவது அவசியம்' என்று கருதப்பட்டால், இந்த உத்தரவாதத்தை அளிக்கும்படி குழு சிபாரிசு செய்யும்.

பருத்தி நூல் ஏற்றுமதியாளர்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கின்றன. தரமான நூலை ஆலைகள் உற்பத்தி செய்ய முடியுமானல், இலங்கைக்கும் மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்புகள் இருப்பதாகவும், தரமான நூலை தயாரிக்கும்படி ஆலைச் சொந்தக்காரர்களிடம் கூறும்படியும் மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் சொல்லியிருக்கிறார். உள்நாட்டிலும் நூலுக்கு விற்பனை வரிச் சலுகை பற்றி ஆலைகளிடமிருந்து யோசனைகள் வந்தால் பரிசிலனை செய்யப்படும்."

ஆலைத் தொழிலாளர்கள் விடுதலையாயினர்

கோவை, மே 20—

கோவையில் பஞ்சாலை நெருக்கடியில் தீர்வு காணக் கோரி அறப்போரில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட 1,000-த்துக்கும் அதிகமான தொழிலாளர்கள், தமிழக அரசின் உத்தரவின் மீது இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன் நிகழ்ச்சிகள்

மே 23 : மாலை 5 மணி : கொட்டம்பட்டி--மேலூர் வடக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கல்நாட்டு விழா ; மாலை 6 மணி : வெள்ளாளப்பட்டி—மேனிலை நீர்த் தொட்டித் திறப்பு விழா ; மாலை 6-45 மணி : நத்தம் திரைப்பட அரங்கு திறப்புவிழா; 7-15 மணி : நத்தம் ஊராட்சி வரவேற்பு; இரவு 8 மணி : பொதுக்கூட்டம்.

பாராட்டு விழா

சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எஸ். இராகவானந்தம், ஜி பராங்குசம் ஆகியோருக்குப் பாராட்டு, 22—5—68 மாலை 6 மணிக்கு மதுரை இரயில்வே இன்ஸ்டிட்யூட் அரங்கில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., எஸ். முத்து எம்.எல்.சி., எஸ். எஸ். தென்னரசு, நீ. அன்புச்செழியன் எம்.பி, தா. கிருஷ்ணன் எம்.பி. ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

வருவாய் அதிகரிப்பு

மத்திய அரசு தீர்வை விதிக்கும் இனங்கள் மூலம் வருவாய் கூடுதலாகியுள்ளது.

சென்ற நிதியாண்டில் முதல் 11 மாதங்களில் கிடைத்துள்ள வருவாய் ரூ. 1,972.01 கோடியாகும்.

அதற்கு முந்தைய ஆண்டில் இதே காலத்தில் கிடைத்த வருவாய் ரூ 1,811.05 கோடி.

இவ்வாண்டு பிப்ரவரியில் மட்டும் வசூலான வரி வருமானம் ரூ. 200.87 கோடி. சென்ற ஆண்டு பிப்ரவரியில் வசூலானது ரூ. 182.55 கோடிதான்.

சுப்பிரமணிய ஆராய்ச்சி !

"அண்ணாதுரைக்கு இன்று செல்வாக்கு இருக்கக் காரணம் என்ன ? அவர் ஆளுக்குத் தக்கபடி வேஷம் போடுகிறார். கூட்டத்திற்குத் தக்கபடி பேசுகிறார். இருக்கின்ற சூழ்நிலைக்குத் தக்கபடி பேசுகிறார். அதனால் அவரைச் 'சர்வோதய ஊழியர்' என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் பாராட்டுகிறார். இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் அவரை 'ஏழைகளின் நண்பர்' என்கின்றனர். 'சனநாயகத்தின் காவலன்' என்று அமெரிக்கர்கள் பாராட்டுகிறார்கள்."

— சி. சுப்பிரமணியம்

'அவர்கள்' நாளிதழ் : 13—5—68

இது, வேண்டாத ஆராய்ச்சி! அறிஞர் அண்ணா அவர்களின் புகழைக் கண்டு வயிறு எரிகிறது! அதைக் கொட்டுகிறார் அவ்வளவுதான்! அது சரி. இதிலே என்ன தப்பு ? சர்வோதய ஊழியராக இருப்பவர் ஏழைகளின் நண்பனாக இருக்கக் கூடாதா ? ஏழைகளின் நண்பன் சனநாயகக் காவலனாக இருக்க முடியாதா ? இதிலென்ன முரண்பாடு இருக்கிறது ?

பொருமையில் என்னென்னவோ உளறுகிறார், பாவம் !

கடையநல்லூர் தொகுதி சீரணித் தொண்டர்கட்கு :

"கடையநல்லூர் நகராட்சி, ஊராட்சி ஒன்றிய சீரணித் தொண்டர்களின் கூட்டு ஆலோசனைக் கூட்டம், 24 5—68 மாலை 4 மணிக்கு கடையநல்லூர் நகராட்சி அலுவலகக் கட்டிடத்தில் நடைபெறும்; சீரணித் தொண்டர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவருது கலந்துகொள்ள வேண்டுகிறேன்"

என, கடைநல்லூர் நகர தி.மு.க. செயலாளர் சி. நடராசன் அறிவிக்கிறார்.

பொதுநலத் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா சுற்றுப்பயணம்

மே 22 : காலை 10 மணி : பிணையூர்—வேளாண்மை உற்பத்தி -- குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கருத்தரங்கு -- பொருட்காட்சி திறப்புவிழா ; மாலை 4-30 மணி : நெல்லிக்குப்பம்—இ.ஐ.டி. பாரி தொழிற்சாலையைப் பார்வையிடுதல் ; 5 மணி : முலுக்கப்பாளையம் வார்டு கழிவுநீர் பாதிப்புப் பகுதியைப் பார்வையிடல் ; 5-30 மணி : நெல்லிக்குப்பம் ஓமியோபதி கல்லூரி ஆண்டு விழா.

மே 23 : மாலை 4 மணி : மதுரை—வக்ப் போர்டு கல்லூரிக்கான இடங்களைப் பார்வையிடுதல்.

ஏ.வி.பி ஆசைத்தம்பிக்கு இலண்டன் தமிழ்ச் சங்க வரவேற்பு

தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் பற்றி விளக்கம்

இலண்டன், மே 20—

இங்கிலாந்து நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் பார்லிமெண்டரி பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், அயர்லாந்து நாட்டில் நான்கு நாள் சுற்றுப்பயணம் செய்யத் தொடங்கியிருக்கிறார்.

இலண்டனிலுள்ள தமிழ்ச் சங்கம், திரு. ஆசைத்தம்பிக்கு வரவேற்பு அளித்தது; விழாவுக்கு மலேசியத் தூதர் திரு. குமாரசாமி தலைமைதாங்கினர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், திரு. ஆசைத்தம்பி அவர்கள், உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தையும், தமிழகத்தில் தி. மு. கழக அரசு ஓராண்டுக் காலத்தில் சாதித்த சாதனைகள் பற்றியும் விளக்கிக் கூறினர்.

பின்னர், இலண்டனிலுள்ள இந்தியத் தூதர் அலுவலகத்தில் அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது; இந்த விருந்தில் மாராட்டிர நீர்ப்பாசன அமைச்சர் சவானும் கலந்துகொண்டார்.

மே 23-ம் நாளன்று, வட அயர்லாந்திலிருந்து புறப்பட்டு மாஞ்செஸ்டர் வழியாக ஜெர்சி தீவுக்குப் பயணமாகிறார் ; அங்கு நான்கு நாட்கள் தங்கியிருப்பார்.

திருமண அழைப்பு

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களின் தலைமகள் செல்வி: மாலைமணிக்கும்—விளாத்திக்குளம் திரு. எ. ஆர். கருப்பசாமி அவர்களின் மகன் செல்வன்: பாக்கியராமனுக்கும் 23—5—68 காலை 10 மணியளவில், மதுரை தமுக்கம் கலையரங்கில், முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்—தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

மாலை 5-மணிக்கு கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, நெல்லையப்பர் கல்யாண மகாலில் வரவேற்பு ; இரவு 9-மணியளவில் ஆரப்பாளையம் குறுக்கு வீதி மணமகள் இல்லத்தின் முன்பாக இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

அழைப்பிதழ் கிடைக்கப்பெருத அன்பர்களும் இதனையே அழைப்பாக ஏற்று விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தோழர் முத்து வேண்டிக் கொள்கிறார்.

திருவாரூர்நகர் தி. மு. கழகம்

நிர்வாக பொறுப்புகளை மாவட்டச் செயலாளர் ஏற்பார்

"திருவாரூர் நகர தி. மு. கழகத் தோழர்களிடையில் ஏற்பட்ட வேறுபாடுகளைத் தீர்த்து வைத்துக் கிளையின் நிர்வாகம் சரிவர இயங்கும் வகையில்—தலைமைக் கழகச் சார்பில் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள், அண்மையில் சம்பந்தப்பட்ட தோழர்களுடன் கலந்து பேசி, திருவாரூர் நகரக் கிளையின் பணிகளை நகரக் கழகத் தேர்தல்கள் வரை நிறைவேற்றிவரும் வகையில்—தோழர் நாகப்பன் அவர்கள் தலைமையில் பொறுப்புக் குழு ஒன்று அமைத்து ஆவன செய்தார்.

"இவ்விதம் அமைக்கப்பட்ட பொறுப்புக் குழுவின் ஓர் உறுப்பினரும் நகரக் கிளையின் துணைச் செயலாளராக இருந்தவருமான தோழர் பால்ராஜ் அவர்களைக் கழகத்திலிருந்து நீக்கிவிட்டதாகப் பொறுப்புக் குழுச் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது, பொறுப்புக் குழுவினுடைய வரம்பை மீறிய செயலாகும்,

"எனவே, தனது வரம்பை மீறிச் செயலாற்ற முனைந்த பொறுப்புக்குழு கலைக்கப்பட்டு, திருவாரூர் நகரக் கழகத் தேர்தல் நடத்தி முடிக்கப்படும் வரையில் திருவாரூர் நகரக் கிளையின் முழு நிர்வாகப் பொறுப்பும் தஞ்சை மாவட்ட தி மு. க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்பதை இதன்மூலம் தலைமைக் கழகச் சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

என். வி. நடராசன்
அமைப்புச் செயலாளர், தி. மு. க.

சென்னை 40-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு :

"சென்னை 40-வது வட்ட தி.மு.க. கிளையின் அவசர செயற்குழுக் கூட்டம், 25—5—68 மாலை 6-30 மணிக்கு தேனாம்பேட்டை 'அன்பகத்'தில், அமைப்புச் செயலாளர் திரு என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும் ; அதுபோது கிளைக் கழகப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் ; இதனையே அழைப்பாக ஏற்று, 40-வது வட்ட தி.மு.க. கிளைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவருமல் வருகைதர வேண்டுகிறேன்"

என்று, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

23--5--68

பரமக்குடி

வட்ட தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு வைகையாறு குமரன் படித்துறையில் ; தலைவர் : சுப. தங்கவேலன் ; பேசுவோர் : அமைச்சர் மு. கண்ணப்பன் எஸ். எஸ். தென்னரசு, வீ. மலைக்கண்ணன் எம்.எல்.ஏ., தொ. க. சிறைமீட்டான் எம். எல். ஏ., தமிழ்க்குடிமகன் எம்.எல்.ஏ., நாகலிங்கம், இரா. சு. மணி, கண. முத்துக்கருப்பன், அ. வே. அரவரசன், அ. செல்லச்சாமி.

கோபி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரியார் திடலில் ; பேசுவோர் : மு. சின்னசாமி எம்.எல்.ஏ., பி. ஏ. சாமிநாதன் எம்.பி., டாக்டர் சேதுபாஸ்கரன், டாக்டர் எஸ். எம். பழனியப்பன், கே. எஸ். ஆனந்தன் பி.காம், பி.எல்., வி. வி. வெங்கடாசலம் பி.எஸ்சி., பி.எல்., ஜி. பி. வெங்கிடு எம்.சி., பி. கே. பழனியப்பன்.

லால்குடி

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கீழவீதி பெரியார் திடலில் ; தலைவர் : எம். துரைராஜ் ; பேசுவோர் : கோ. சிவப்பெருமாள், கோபால் பி.காம்., இலக்கியதாசன், மு. இலக்கையன், எஸ் வி. மலீக் (மணி-சாமி கலை நிகழ்ச்சி நடைபெறும்)

பட்டுக்கோட்டை

அண்ணா மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு காசாங்குளம் வடகரையில் ; தலைவர் : அ. பத்மநாபன் ; பேசுவோர் பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., எஸ். பாப்பையன், கே. மாணிக்கம்.

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

மே 22 : குருசாமிபாளையம் ; 23 : இராசிபுரம் ; 24 : நாமக்கல் ; 26 : சிதம்பரம் ; 27 : திருவேங்கிடம் ; 28 : வள்ளியூர்.

ஜூன் 2 : மன்னார்குடி ; 3 : இராசகிரி ; 4 : ஏனாதி ; 5 : திருநிலக்குடி ; 6 : திருவையாறு ; 9 : நாகப்பட்டினம் ; 10 : திருவாப்பாடி ; 16 : துறையூர்.

ஜீவா கலைமணி நிகழ்ச்சிகள்

மே 22 : தென்புத்தூர் ; 26 : பட்டுக்கோட்டை ; 27 : எடமேலையூர் ; 28 : தெப்பக்குளம் ; 29 : பண்ணங்கொம்பு.

ஜூன் 2 : திருவாசலூர் ; 8 : பரமக்குடி ; 9 : திருச்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.